மெர்சேசைட் (MERSEYSIDE) தீவிபத்து மற்றும் மீட்புச் சேவை

# குடியிருப்போருக்கான பாதுகாப்பு அறிவுரை

- ஒரு உயரமான கட்டிடத்தில் நீங்கள் வசிக்கிறீர்கள் என்றால், ஒரு தீ விபத்து ஏற்படுவதற்கான பெரும் அபாயத்தில் நீங்கள் **இல்லை**
- புகை வந்தால் எச்சரிக்கின்ற ஒரு எச்சரிப்புக் கருவியையாவது குறைந்தபட்சம் அங்கே பொருத்துங்கள் மற்றும் அதை ஒழுங்கான அளவில் சோதித்து வாருங்கள்
- ஒரு தீ விபத்து நேர்ந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை **திட்டமிட்டுக் கொள்ளுங்கள்**
- தப்பிச் செல்வதற்கான ஒரு பாதையை **தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள்**

# தீப்பிடித்து விட்டது என்றால் என்ன செய்ய வேண்டும்

- உங்களது வீட்டில் தீப்பிடித்து விட்டது என்றால், உங்களது ஃப்ளாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் எச்சரியுங்கள், அந்த இடத்தை விட்டு அனைவரும் வெளியேறுங்கள், உங்களுக்கு பின்னால் உள்ள கதவை மூடிச்செல்லுங்கள்
- உங்களது கட்டிடத்திற்கான தப்பித்துச் செல்லும் திட்டத்தைப் பின்பற்றுங்கள்
- எப்பொழுதுமே ஏணிப்படிகளைப் பயன்படுத்துங்கள், லிஃப்டினைப் பயன்படுத்தாதீர்கள் மற்றும் ஒரு பாதுகாப்பான இடத்தை அடைந்த உடனே 999 என்ற எண்ணை அழைத்திடுங்கள்
- தப்பித்துச் செல்வதற்கு உங்களால் திட்டமிடப்பட்ட பாதை மிகவும் அபாயகரமாக இருக்கிறது என்றால், அதாவது ஏணிப்படிகள் மற்றும் கூடங்கள் புகை நிறைந்து இருந்தால், 999 என்ற எண்ணை அழைத்திடுங்கள் மற்றும் மிகப்பாதுகாப்பாக உள்ள அறையில் தங்கியிருங்கள்-கதவுகளைச் சாத்திக் கொள்ளுங்கள் மற்றும் அந்த கதவின் அடியில் இருந்து புகை உள்ளே வருவதைத் தடுப்பதற்கு, டவல்கள் அல்லது படுக்கை விரிப்புகளைப் பயன்படுத்தி அந்த இடைவெளிகளை அடைத்திடுங்கள்
- அந்த கட்டிடத்தில் உள்ள இன்னொரு ஃப்ளாட்டில் தீப்பிடித்துள்ளது என்றால், வெப்பம் அல்லது புகையினால் நீங்கள் பாதிக்கப்பட்டால் தவிர, பொதுவாக, உங்களுக்குச் சொந்தமான அந்த வீட்டில் தான் நீங்கள் மிகப்பாதுகாப்பாக இருக்கிறீர்கள்
- ஓரிடத்தில் தீப்பிடித்து விட்டது என்றால், யாரேனும் 999 என்ற எண்ணை அழைத்திருப்பார்கள் என்று அனுமானம் கொள்ள வேண்டாம் - நீங்களே அந்த எண்ணைத் தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு உயரமான குடியிருப்பில் வசிப்பவர் எவரும், அல்லது ஒரு உயரமான குடியிருப்பில் வசித்து வரும்பொழுது பாதிக்கப்படக்கூடிய தங்களது அன்புக்குரியவர் பற்றி கவலைப்படக்கூடிய எவரும், அறிவுரைக்காக ஃபயர் சர்வீஸ் டைரக்டினை **0800 731 5958** என்ற எண்ணில் அழைக்கலாம் அல்லது fireservicedirect@merseyfire.gov.uk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்

**999** என்ற எண்ணுக்கு செய்யப்படும் ஒரு அவசரக்கால அழைப்பின் பொழுது, சமூக ஊடகங்களும் எமது இணையதளமும் 24/7- கண்காணிக்கப்படுவதில்லை